ஏழை
எரிமலை

இரா. செழியன் M.A

ஏழை - எரிமலை

இரா. செழியன், M. A.

முன்னேற்றப் பண்ணை
சென்னை-1.

பதிப்புரிமை.

முதற் பதிப்பு: 1951.

விலை அணா எட்டு.

அச்சிட்டது: கே. ஜி. பிரஸ், சென்னை-1.

படையல்

செழியன் உங்கள் இதயத்தில் நல்ல தொரு இடம் பெற்றுள்ள எழுத்தாளர். அவரது எழுத்துக்களின் வன்மையும், வளமையும் "மன்றம்", "திராவிடநாடு" முதலிய இதழ்களின்மூலம், எல்லோரும் அறிந்த தொரு செய்தி.

"பிருந்தாவனத்தில்", "கல்வி நீரோடை" என்ற இவரது இரு எழுத் தோவியங்களின் தொடராக, மூன்ருவது நூலாக, வெளிவருகிறது **ஏழை—எரிமலை.**

ஏழை—எரிமலை, நாட்டுக்குத் தேவை யானதொன்று என்று திடமனதுடன் உங்களுக்குப் படைக்கின்றேன்.

வணக்கம்.

மு. சுடிசிவாயம்,

பண்ணையாளர்.

படியுங்கள்.

செழியன் தீட்டியவை.

பிருந்தாவனத்தில்	விலை ரூ.	0 12 0
கல்வி நீரோடை		0 6 0
தீச்சுழலில்		0 6 0
ராஜாதி! ராஜா!!		(அச்சில்)
சிவந்த ரோஜா		(அச்சில்)

முன்னேற்றப் பண்ணை,

சென்னை—1.

ஏழை—எரிமலை!

மக்களின் கோபம், மன்னனை என்ன செய்ய முடியும்?

மன்னன், எவ்வளவு கொடுமைப் படுத்தினாலும் மக்கள், மனம் நொந்து சபித்தாலும், அரசாளப் பிறந்தவன், ஆண்டுகொண்டுதானே இருப்பான்!

ஆண்டவன், அரசனைப் பிறப்பிக்கிறான்! அரசனை எதிர்த்தால், ஆண்டவனின் ஏற்பாட்டை எதிர்ப்பது என்றாகும். தேவநிந்தனை, பெரும்பாபம்.

கொடுங்கோல் மன்னன் வாழ்கிற நாட்டைவிட கடும்புலி வாழ்கிற காடே மேல். அவ்வளவுதான் செய்யமுடியுமே தவிர, வேறு என்னசெய்ய இயலும்?

மன்னனுக்கு அடுத்தபடி, சீமான்கள்! அவர்கள், இலட்சுமி புத்ரர்கள்!!

பெரும் புண்யவான், மன்னனாகிறான்! சாதாரணப் புண்யவான்கள், சீமான்களாகின்றனர்! ஆக, இருவரும் இறைவனின் அருளைப் பெற்றவர்களே!

மக்களின் வாழ்வின் மீதோ, பாப மூட்டைகள் தான், வறுமை, நோய், வேலையில்லாக் கொடுமை என்ற உருவிலே உள்ளன. அவர்கள், 'அடுத்த ஜென்மத்திலாவது நல்வாழ்வு' கிடைக்கவேண்டு மென்று நாதனை வேண்டுவதன்றி, வேறு வழி இல்லை என்று வெளிப்படையாக பேசினர் முன்பெல்லாம்.

சீமான்கள்! தனிரகம்! மன்னனுக்காவது, வார்சுகளின் தொல்லை, வெளிநாட்டு வேந்தரால் ஆபத்து ஏற்படும். இவர்களுக்கோ, எவ்வகை ஆபத்தும் கிடையாது. இன்பவாழ்வு! மது உண்டு. அதை ஊற்றித்தர மங்கை உண்டு, மங்கையர்க்கு அழகு உண்டு, அதை அழிக்கும் வல்லமை சீமான்களுக்கு உண்டு! அவர்களின் மாளிகைகள், கலை கொஞ்சும் இடமாயிற்று! கலைவாணர்களோ, அவர்களுக்குக் கட்டியம் கூறிப் பிழைப்பவர். கவிவாணர்கள் புகழ்மாலை சூட்டுவர். காமக்கிழத்தியர், தமது காமம் கக்கும் கண்களான கெண்டையை வீசி, சீமான் வர்க்கத்தினரான விரால்களை இழுப்பர். ஒரே கோலாகலமான வாழ்வு!

இந்தக் கோலாகல வாழ்வுக்கான வசதிகளைத் தேடித்தர, ஒவ்வோர் சீமானிடமும் ஆயிரக் கணக்கில் ஆட்கள் இருப்பர். அவர்கள் கழனிகளில் மாடுகளாவர், மாளிகை வாயிலில் நாய்களெனக் காத்துக்கிடப்பர். வறுமை கொட்டும்! அதைவிட அதிகமாக, சீமான்கள் என்ன செய்வாரோ என்ற அச்சம் அவர்களைப் பிடித்தாட்டும், கைகட்டி வாய்

பொத்தி நிற்பர் அவர்கள். சீமான் கேட்கும்போதெல்லாம், வரிதரவேண்டும். சில வேலைகளில் அபராதம் தரவேண்டும். வேறு சில வேளைகளில் சீமான்கள், கிடைப்பதை எடுத்துச் செல்வர், ஏழை ஏதும் கேட்கவே முடியாது. அவர்கள் ஏழைகள் மட்டுமல்ல, கோழைகள்!

ஏழையோ கோழை! சீமானோ உல்லாசமின்றி வேறொன்று அறியான்—விரும்பான். மன்னனோ மதோன்மத்தன்! மன்னன் மனைவியோ, மந்தகாசம் தவிர வேறு ஏதும் விரும்பாதவள்!

புரட்சிக்கு முன்பு, இதுதான் பிரான்ஸ்!

இருப்பது முப்பது ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடம். அதைச் சுற்றி முள் வேலி! அங்குதான், சீமானின் மாளிகை இருக்கும். மாளிகைக்கு அழகுதர, தோட்டம். தோட்டத்துக்கு அழகுதர, சிறுகுளம்—அதிலே சிங்காரிகள்! அவர்கள் நீராடுவர்! அதுகண்டு, சீமான்கள் களிநடமாடுவார்! அவர்கள் சிரித்துப் பேசுவர், சீமான் சொக்கி சாய்வார்! அவர்களின் அதரம் துடிக்கும். சீமானின் நெஞ்சமோ, அருகே சென்று அவளை அணைத்து முத்தமிடாவிட்டால், தன் நெஞ்சு வெடிக்கும் என்று கூறுவார். சேல்விழியாள், சிற்றிடையாள், வாட்கண்ணால், சுருண்ட குழலழகி, கிளிமொழியாள், கட்டுக் கடங்காக் கனகப்பந்தினைக்கொண்ட காரிகை இவ்வண்ணம் இருப்பர்! இந்த இன்பவல்லிகளுடன் கொஞ்சி விளையாடும் சீமானுக்கு, கொள்ளைப்புறத்திலே, குமுறிச் சாகும் பணியாள், நோய் உயிரைக்

கொஞ்சம் கொஞ்சமாகத் தின்ன, அது தெரிந்தும் தடுக்கமுடியாதது கண்டு, திகைத்துக் கிடக்கும் தரித் திரிவானின் புழுப்போன்ற நிலைமை, இதுவா நினை விற்கு வரும்.

ஒரு கையில் திராட்சைப் பழக்கொத்தும், மற்றோர் கையில் அதன் ரசம் ஊற்றப்பட்ட பானக் கோப்பையும் ஏந்திக்கொண்டு, கண்கள் சுழல, ஆடை நெகிழ, கூந்தல் புரள, சிற்றிடை துடிக்க, அவள் அருகே நடந்துவந்து, ஆஹா! ஐய்யோ! அப் பப்பா! போதுமே! இன்னமுமா! முடியவே முடியாது! என்று சரச மொழிகளைப் பொழிகிறபோது, சீமா னின் காதிலே, காலமெல்லாம் பாடுபட்டவனின் ஈனக் குரல், குமுறல், அழுகுரல், பெருமூச்சு, ஏறுமா? அவன் ஆனந்தபுரியிலல்லவா வாழ்கிறான்! அடிமையின் அழுகுரலைக் கேட்க அவனுக்கு நேரம் ஏது? அழவேண்டியவன் அழுகிறான்! ஆமாம்! கண் களுக்கு நீரைப் பொழியவைக்கும் சக்தி இருக்கும் வரையில்தானே அழப்போகிறான்! பிறகு? கண் களும் வறண்டு விடும்! உலகம் ஒரே அந்தகாரமாகி விடும்! அவன் மனிதன், என்று வேறு யாரேனும் கவனப்படுத்தியாக வேண்டும்—இல்லையேல், அவன் நடைப் பிணந்தான்! அவன் உழுத வயலிலே பச்சைப்பசேலென பயிர் ஏறி இருக்கும்—அவனு டைய கண்களோ பஞ்சடைத்து இருக்கும்.

* * *

“எஜமானர் இருக்கிறாரா?”

"ஏண்டா மூடா! இருக்கிறாரா? என்று கேட்கிறாயே திமிரா உனக்கு? இல்லாமல் எங்கு போய் விடுவார்?"

"ஒரு மனு................"

"இன்று அவரைப் பார்க்க முடியாது"

"நாலு நாட்களாக வந்து போகிறேனே"

"நாயே! நாலுநாட்கள் நடந்தால் எனக்கென்ன, நாற்பதுநாட்கள் நடந்தால் என்னடா?"

* * *

கதவு 'படார்' என்று சாத்தப்படும்! ஏழை, தள்ளாடி மறுபடியும் தன்வீடு அடைவான்! வீடா அது? வேதனைக் கூடம்!

"வந்துவிட்டீர்களா!"

அந்தக் குரலிலே ஆவல் தோய்ந்து இருக்கும்.

ஒரு வறண்ட பார்வையை அவன் பதிலாக அளிப்பான்.

"என்ன சொன்னார்?"

"அவரா? நான் பார்க்கவே இல்லையே!"

"ஏன்?"

"அவருக்கு ஓய்வு இல்லையாம்" குடிசையில் இந்தப்பேச்சு நடக்கும்.

ஓய்வு இல்லாச் சீமான்! உண்மைதான் அது! விருந்தளிப்பது, விருந்துக்குச் செல்வது! காமக் கிழத்தியைத் தொடுவது! ஒரே வேட்டைமயம்!!

ஆமாம்! ஓய்வு கிடைக்கும்போது அவர், குதிரை மீதேறிக்கொண்டு, மாளிகைக்கு அருகே உள்ள சிறு அடவிக்குச் செல்வார்—முயல் வேட்டைக்கு, மான் வேட்டைக்கு!!

வேட்டை நாய்கள் அவரைப்புடை சூழ்ந்து செல்லும். மது உண்ட மங்கையின் குளறுமொழி அவரைச் சொக்கவைப்பதுபோலவே, அந்த வேட்டை நாய்களின் 'குரைப்பு ஒலி'யும் அவருக்கு ஆனந்தமளிக்கும். கெம்பீரமாகச் சவாரி செய்வார்! ஒரு முயல் சிக்கினால் போதும், சீமானின் வீரத்தை பாராட்டுவர்! மறுதினம் அந்த மகத்தான சம்பவத்தைக் கொண்டாட விருந்து நடக்கும்.

* * *

"அந்த நீல உடைக்காரி!...........யார்?"

"அவளா? நெளியும் அந்த இடையில், என் கரம் நேற்றிரவு..........."

"ஓஹோ! அவள் உன் மதுக்கிண்ணமா?"

"கிண்ணத்தில் மது கிடையாதடா!"

"என்னடா அது?"

"அவளுடைய எழில், தொலைவில்தான்! அருகே நெருங்கினால், அவ்வளவு வெறும் பூச்சு என்பது தெரியும்"

ஒவ்வோர் புறத்திலே ஒவ்வோர் வகையான சம்பாஷணை—எல்லாம் இன்ப வாழ்வு பற்றியே இருக்கும். சில இடங்களிலே சீற்ற மொழியும் உண்டாகும்.

"என் பாதையில் குறுக்கிட்டான். நாளை மாலை நான் அவனுடன் வாட்போர் நடத்தப் போகிறேன்."

"என் வாட்போர்?"

"நான் நேசித்துவந்த நடன சுந்தரியின் மனதை அவன் மயக்கி என் சந்தோஷத்தை அழித்தான். ஆகவே அவன் அழிக்கப்படவேண்டியவன்"

இங்ஙனம் சூள் உரைப்பான் வாலிபமுடுக்குள்ள சீமான். வயோதிகனே, "ஆபத்து வந்தால் நான் கவனித்துக் கொள்கிறேன். அரசன் என் கைக்குள்! ஆளைத் தீர்த்துவிடு. அந்தி வேளையில் அருவிப் பக்கம் அவன் தனியாக உலவ வருவது வழக்கம்"—என்று கூறிக் கொலையாளியை ஏவுவான், வேறோர் சீமான் மீது!

* * *

"நாகரிக நகரங்களில் நான் உலவி இருக்கிறேன். நங்கையரை நேசித்திருக்கிறேன். ஒய்யாரிகளுடன் உலவி இருக்கிறேன்—குலவி இருக்கிறேன். ஆனால் ஆரணங்கே! நான் முதன் முறையாக, இருதய பூர்வமாக, காதலிப்பது, உன்னைத்தான்! இது உதட்டு அசைவு அல்ல உள்ளத்தினின்றும் வெளிவரும் உண்மை!"

"காதலிப்பது முதல் முறையா? கட்டுக்கதை !!

"நிச்சயமாக அப்படித்தான் தோன்றும் உனக்கு. உனக்கு மட்டுமா, அனைவருக்கும். நாட்டிய சாலைகளிலே வட்டமிட்டுக்கிடந்த வாலிபன் தானே இவன்! இவனுக்கா இதுவரை காதல் ஏற்பட்டிராது!! என்றே எவரும் எண்ணுவர். கள்ளச் சிந்தனையற்றுக் கூறுகிறேன், கனிமொழியாளே! நான் உன்னைக் கண்ட பிறகே உண்மை காதலின் உயர்வைத் தெரிந்துகொண்டேன்! இதுவரை நான் உழன்றேன்—கெட்டு அலைந்தேன்—தீவு நோக்கிப் பறக்கும் சிறு பறவையைப்போல அலைந்தேன்...."

அதற்குமேல், அவள் அவனைப்பேச அனுமதிக்கமாட்டாள்! முத்துமாலை பரிசளிப்பாள்! அழகும் இளமையும் பலியாகும்!........புதிய ஜோடி!

இவ்வளவு வேலைகள் இருக்கும்போது சீமான்களுக்கு ஓய்வு ஏது?

அந்த ஏழை சொன்னது சரி! ஓய்வு இல்லை சீமானுக்கு!! ஏழையின் குறையைக் கண்டறிய நேரம் இல்லை! ஆண்டவனுக்கும் நேரம் இல்லை! திகைத்துப் போயிருக்கான் தேவன் !! தன் சிருஷ்டியிலே ஏற்பட்ட அலங்கோலத்தைக் கண்டு !!

ஆண்டவன், அரசாள்பவன், சீமான், யாருக்கும் ஓய்வு இல்லை!

தேவாலயத்திலே திருவிழாக்களுக்குக் குறை வில்லை! அரண்மனையிலே, 'தர்பார்கள்' நடந்த வண்ணம் இருந்தன. மாளிகையிலே, விருந்துகள் நித்ய நிகழ்ச்சி! யாருக்கும் ஓய்வு இல்லை!! ஏழை என்ன செய்வான்? என்ன செய்தான்?

ஜூலை 14! அதுதான் அவன் செய்த வேலை! பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான்! ஜெபித்தான்—மண்டியிட்டான்—காலைப் பிடித்தான்—கண்ணீர் பொழிந்தான்—எல்லாம் செய்து பார்த்தாகி விட்டது.

ஓய்வு இல்லை

நேரம் இல்லை

செய்வதற்கு ஒன்றுமில்லை.

இவ்வளவுதான், அவன்பெற்ற பதில்கள்! மேலால் பேசினல் சவுக்கடி, வேட்டை நாய், ஆளை வேட்டையாடும் அதிகார வர்க்கம்! கொஞ்சம் கோபமாகப் பேசினல் கத்தி, குண்டு! சிலருடன் கூடிப் பேசினல், அதிகார வர்க்கம் சீறும், சீறினல், பாஸ்ட்டிலி! ஆமாம்! பாஸ்ட்டிலி!! மனிதனை உயிரோடு வதைக்கும் சிறைக்கூடம்! வாலிபனை வயோதிகனுக்கும் இடம்! திடசித்தமுடையவனைப் பித்தனுக்கும் இடம்!!

இந்நிலையிலே கிடந்தவன், கடைசி வழியைக் கண்டு பிடித்தான்! இல்லை—தவறு! கடைசிப்பாதையில் துரத்தப்பட்டான்! ஜூலை 14!! புரட்சி!!

பல காலமாகக் குமுறிக் கொண்டிருந்த உள்ளம்! எரிமலை நெருப்பைக் கக்கலாயிற்று. எதிர்பாராததுதான்! ஆனால் புரட்சி நேரிட்டபோது, பிரான்சு நாட்டுச் சீமான்கள் நடுநடுங்கினர்.

மன்னனின் அதிகாரம் தானாகவே ஓர் சிக்கலை உண்டாக்கிக் கொண்டது. சீமான்களிடம், மன்னன் வரிபெற முடிவதில்லை! மக்களுக்கோ, வரிப்பளுவைத் தாங்கும் சக்தி இல்லை. நாட்டு வளத்தைப் பெருக்கும் அறிவுக்கு இடமில்லை—சர்க்கார் நிர்வாகமோ, மாடு மேய்ந்த வயலின் நிலை பெற்றது. இதுசமயம், வரவு—செலவுத் திட்டத்தை ஒழுங்கு படுத்த மன்னன், நிபுணர்களைத் தேடினான். ஒருவர் பின் ஒருவராக வந்த நிபுணர்கள், தங்களின் திறமை, இந்தச் சிக்கு அறுக்க முடியவில்லை என்பதைக் கண்டு கலங்கினர்.

சர்க்காருக்கு இந்தச் சஞ்சலம். அதே போது ஏழை உலகிலே, மெள்ள மெள்ளப் பரவிய புரட்சிக் கருத்துக்கள் புத்துருவெடுத்தன.

"கிடக்கிறான் தள்ளு!"

"உரக்கப் பேசாதே. தெரிந்தால் அதிகாரம் தாக்கும்"

"வறுமை தாக்கித் தாக்கி வைரம் பாய்ந்த கட்டையடா, இது. வேறு தாக்குதலுக்குப் பயப்படவேண்டியதில்லை. போ"

"போலீஸ் வரும்! பட்டாளம் வரும்! துப்பாக்கியால் சுடுவர்!"

"துப்பாக்கி என்ன செய்யும்? சாகடிக்கும். போடா! முட்டாளே! இப்போது நான் வாழ்ந்து கொண்டா இருக்கிறேன்"

ஏழையின் குரலிலே ஓர் புதுமை! பேச்சிலே புரட்சி! பார்வையிலே புரட்சி! ஆம்! அவன் புரட்சிமயமானுன். மக்களிடை புரட்சி மனப்பான்மை! மன்னன் மனதிலேயோ மருட்சி!

ஸ்டேட்ஸ் ஜெனரல், எனும் மக்கள் மன்றத்தைக் கூட்ட உத்தரவிட்டான் மன்னன்; நெருக்கடியைத் தீர்க்க.

கூடிற்று! நெருக்கடியைத் தீர்க்க அல்ல, கொடுங்கோன்மைக்கு நெருப்பிட!!

419 வருஷங்களாகக் கூடாத சபை கூடிற்று, 1789-ல். தலைமுறை தலைமுறையாக, மன்னர்கள், எந்த மன்றத்தைக் கூட்டாமல், அசட்டை செய்தனரோ, அந்தச் சபையைக் கூட்டவேண்டிய அளவு நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

மக்களின் பிரதிநிதிகள், சீமான்களின் பிரதிநிதிகள், மத அதிகாரிகளின் பிரதிநிதிகள்—எனும் முப்பிரிவு, இச்சபையில்—ஏர், கோப்பை, ஜெபமாலை! உயிர்பற்றிக் கவலையற்ற வேட்டைக்காரன் பசியுடன் புலி—உருத்திராட்சப் பூனை!!

முப்பிரிவில், வழக்கப்படி, இயல்பின்படி, சீமானும் குருவும் கூடிக்கொண்டு, உழைப்பவனை உள்ளே வா, ஆனல் கொஞ்சம் அடக்கமாகப் பேசு; என்று கூறினர். அதாவது, மக்களின் பிரதிநிதிகளுக்கு, அதிகாரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும், பிரதிநிதிகளின் அளவும் குறைவாக இருக்கவேண்டும் என்றனர்.

மக்கள் மருண்டனரா? இல்லை! 'ஆமாம் சாமி' என்றனரா? இல்லை! 'அப்படியா!' என்று கேட்டனர்—ஆச்சரியத்துடன் அல்ல—கோபத்துடன்.—பேச்சால் அல்ல—பார்வையால்!!

அந்தப் பார்வையை, சீமானும் குருவும் அதற்கு முன்பு கண்டதில்லை. பஞ்சடைந்த கண்களிலே இருந்து நெருப்புப்பொறி பறக்கும் என்று அவர்கள் எண்ணினதில்லை.

1789, மே மாதம் ஐந்தாம் தேதி கூடிய சபையில், முதலிலே இந்தக் கொந்தளிப்பு ஏற்பட்டது. மக்கள், மன்றத்தில் இடம் பிடித்துக்கொண்டனர்—சீமானும் குருவும் ஓரளவுக்கு விஷயத்தைப் புரிந்து கொண்டனர். புதிய உண்மை உலவலாயிற்று. ஏழை, கோழையல்ல! சாகத்துணிந்தவனுக்கு, சீமான் சிறு துரும்பு!!

பணிந்தனர். மக்கள் வெற்றிக் களிப்புடன் முழக்கமிட்டனர்.

இது சபையல்ல—களம்! இவர்கள் மக்களல்ல—மாற்றூர்—என்று மன்னன் எண்ணவேண்டி நேரிட்டது. தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட படை தேடினன், பிரான்சிலே அல்ல—வெளி நாடுகளில்! பட்டாளங்கள் பவனிவந்தன! பிரான்சு நாட்டு மன்னன் கேட்டான், அவன் பேச்சுக்கு மதிப்பு வைத்து வேறு நாட்டு மன்னர்கள் உதவிக்குப் படைகள் அனுப்பினர்! மக்கள் கேட்டால், படை எங்கிருந்து வரும்? யார் அனுப்புவர்? எனவே, மக்களே போர்வீரராயினர்—தெருவெல்லாம் பட்டாளம், கிடைத்ததெல்லாம் ஆயுதம்!!

அதற்குப் பிறகு, புரட்சியின் போக்கைத் தடுக்க யாராலும் முடியவில்லை. எங்கெங்கு முன்பு பணிந்து கிடந்தனரோ, அங்கெல்லாம் பாய்ந்து சென்று தாக்கினர் எங்கெங்கு ஏவல் புரிந்தனரோ! காவல் புரிந்தனரோ, அங்கெல்லாம், சென்று தாக்கினர்! உல்லாசபுரி அல்லோல கல்லோலப்பட்டது. மங்கையர் வெறியிலே மதுக்கிண்ணங்களைக் கீழே வீசும் சத்தமின்றி வேற்றியாச் சீமான், தன் மாளிகைச் சுவரை கட்டை, கல், கையில் கிடைத்த சாமான், சம்மட்டி கொண்டு, 'கும்பல்' தாக்குவது கேட்டு, திகைத்தான்! அவனுடைய 'வீரம்' உதவிக்கு வரவில்லை. வீரமல்லவே அது!—ஆணவத்தை யன்றோ அவனே அதுவரை வீரம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். அவன் மனக்கோட்டை தூளாயிற்று—மாளிகைக்கும் அதே கதி. புரட்சி, மாளிகைகளை மண்மேடாக்கிற்று. மன்னன், குடும்பத்துடன் பிடிபட்டான். எங்கும் இரத்தமயம்! "வெறி

நாய்களைச் சுட்டுத்தள்''—என்று கூறிய ஆணவச் சீமானின் வாயிலிருந்து இரத்தம்!! புரட்சி, பயங்கர உருவெடுத்தது—தடுக்க முடியாத நிலை! எதிர்ப்பட்ட தெல்லாம் தூள்! எவன் எதிர்த்தாலும் சரி, வெட்டு, குத்து, கொல்லு!!

பசி! பசி! பசி!!—ஆம்! முன்பு கதறினன்.

ஜுலை 14-ல்? வெட்டு! குத்து! கொல்லு!-ஆசை தீரச் சொன்னன்! சொல்லிச் சொல்லி ஆனந்தப் பட்டான், அன்றுவரை சொல்லொணுக் கஷ்டப் பட்டவன் !! பாஸ்ட்டிலியை இடித்துத் தரைமட்ட மாக்கினர்! தெருவெல்லாம், திரண்டு திரண்டு சென் றனர்—புரட்சி பொங்கி வழிந்தது. ஒரே நாளில், பல காலமாக இருந்துவந்த ஆணவம் தரைமட்ட மாயிற்று. 150 ஆண்டுகளுக்கு மேலாக, கொடுமைக் கூடமாக இருந்துவந்த பாஸ்ட்டிலி சிறைக் கூடமே, தூள் தூளாயிற்று.

சிறைப்பட்ட மன்னன், சிதறிய சீமான்கள், கோபம் வெறிபோலாகிவிட்ட நிலையில் மக்கள்!

ஜுலை 14-ந் தேதி என்ருல் இதுதான்—ஆணவம் அழிந்த படலம்—ஆதிக்கக்காரன் அடி பணிந்த படலம்,

கொலைவாளினை எடடா!
மிகுகொடியோர் செயல் அறவே.

என்று மக்கள் முழக்கமிட்ட நாள். புரட்சிக் கவிஞன், தந்த லாமார்சலே! என்ற கீதம்பாடி மக்கள் தமதாட்சியை நிறுவப் போரிட்ட நாள்! மக்கள் வகுத்த அரசியல் திட்டம், அவர்கள் புகுத்திய ஏற்பாடு, வெற்றியோ, நிம்மதியோ, தரவில்லை என்பது உண்மை. புரட்சிக்குப் பிறகு குழப்பம் சதி, கலகம், இவைகள் ஏற்பட்டு! மீண்டும் மக்கள் தொல்லைக்கு ஆளாயினர் என்பதும் உண்மை! இரத்த வெறிபிடித்து அலைந்தனர் என்பதும் உண்மை! மீண்டும் சர்வாதிகாரத்துக்குப் பலியாயினர் என்பதும் உண்மை—ஆனால் கொடுமைப் படுத்தப்பட்ட மக்கள், தங்கள் கஷ்டத்தைப் போக்கிக்கொள்ள, உரிமைப் போர்புரிந்த, வீரப்போர்புரிந்த நாள், ஜூலை 14, என்பது, மறுக்கமுடியாத உண்மை—அவர்களை அந்த அளவுக்கு 'இரத்தவெறி' கொள்ள வைத்தது, மன்னனின் எதேச்சாதிகாரம், சீமானின் செருக்கு, குருமாரிகளின் கபடம்! எக்காலமும் மக்களை அடக்கியே வைத்துவிட முடியும் என்பது ஏமாளிக்கொள்கை என்பதை உலகுக்கு உரைத்த நாள் ஜூலை 14! ஏழை என்ன செய்வான்? என்று ஆணவம் பேசலாம், முதலில், பலநாள், ஆனால் அவன் அழுவதை நிறுத்திக்கொண்டு; அச்சத்தைத் துரத்திவிட்டு, அடிமைத்தளைகளை உடைத்தெறிந்து விட்டு, கோபக்கனல் கக்கும் கண்களால் ஆதிக்கம் செலுத்துபவனைப் பார்க்கும் நாள் ஒன்று வரும்—அதுதான் புரட்சி! அதைத் தடுக்க, பட்டாளத்தால் "முடியாது" என்பதைப் பாருக்கு எடுத்துரைத்த நாள், ஜூலை 14.

ஜுலை 13 வரையிலும் கூட, சீமான்கள், பிரான்சிலே மட்டுமல்ல, எந்த நாட்டிலும், ஏழை, கோழை, என்று தான் எண்ணினர். ஜுலை 14-ல் தான், ஏழை, கோழையல்ல, எரிமலை!! என்பதை அறிந்தனர்.

—→×←—

பாரைக் குலுக்கிய :: :: :: :: பத்து நாட்கள்

1914-ல் ஜெர்மனிப்போர் மூண்டது. ருஷிய மன்னனும் தன் படையை அனுப்பி வைத்தான். ஆனல் போர்வீரர்களுக்குத் தேவையான உணவும் உடையும், போர்முனைக்கு அனுப்பப்படவில்லை. உணவுப் பஞ்சம் நாட்டை அல்லற்படுத்தியது. போக்குவரவு சீர்கேடடைந்தது. போர்முனையில் தோல்வி, மக்களுக்குத் திகிலை உண்டாக்கியது.

1917 மார்ச்சில் குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்தது. மன்னனாட்சி மண்ணைக் கவ்வியது. அத்துடன் ருஷிய நாட்டு மக்கள் திருப்தி அடைந்திருந்தால் பிரான்சு, அமெரிக்காப் போன்ற குடியரசு நாடாகவோ அல்லது இங்கிலாந்து போன்ற கட்டுப்பட்ட முடியரசாகவோ ருஷியா இன்று இருந்திருக்கும். சிகப்பு ருஷியாவாகச் சிறப்பெய்தி இருக்காது'

நவம்பர் வந்தது, பொறுக்க முடியாத ருஷிய மாரிக்காலமும் பிறந்தது. தோல்வியிலே உழன்று'

குளிரால் நடுக்குற்று, பசியால் வாடிப், போர்வீரர்கள் உயிர்த் துறந்தனர். உடை, உணவுப் பஞ்சம் அதிகரித்தது. நாடு நலிந்தது. அரசாங்கத்தின் தலைவனுக இருந்த **கெரன்ஸ்கியால்** எத்தகைய உறுதியான உதவியையும் அளிக்கமுடியவில்லை. மக்கள் கலங்கினர். அப்பொழுது போல்ஷ்விக் கட்சி மிகச் சிறிய கட்சி. அவர்களுடைய, சமாதானம், உணவு, நிலம், எனும் முழக்கம் நலிவுற்ற உள்ளத்தைப் புலியுள மாகச் செய்தது. அந்த முழக்கம் அவர்களைப் புரட்சியின் முன்னணியில் கொண்டு வந்து நிறுத்தியது. அப்பொழுதுதான் லெனினின் உருவம் தென்பட்டது, ட்ராட்ஸ்கியின் குரல் கேட்டது.

படைவீரர், உழவாளிகள், தொழிலாளர் இவர்களின் சபைகளுக்கு **சோவியத்** என்று பெயர். **அகில ருஷிய சோவியத்** நவம்பர் 7-ல் கூட்டவேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு வந்து விட்டது, போல்ஷ்விக்கர்கள் எழுச்சிக்குத் தயாராகி விட்டனர். புரட்சிப்படைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. சிகப்புக் காவல்காரர்கள் துப்பாக்கிகளுடன் வெளி வந்தனர். அவர்களை அடக்க அரசாங்கத்திற்குத் திறமை யில்லை. மற்றக் கட்சிக்காரர்கள் கூக்குரலிட்டனர், பலனில்லை. அவர்களும் ஆயத்தம் செய்தனர். கூட்டங்களிலே பலத்த எதிர்ப்புகள், குறுக்குப் பேச்சுகள் அதிகமாயின. எழுச்சிக்கு நாளும் குறிப்

பிடப்பட்டது. 'நவம்பர் 6-ந் தேதி ருஷியா முழுமையும் தயாராகஇருக்காது, மாருக 8-ந் தேதி சோவியத் சபையைச் செயலுக்கு இழுக்க முடியாது. அதிகாரத்தை நாம் கைப்பற்ற வேண்டும். அப்பொழுது தான் சோவியத் கூடியதும் இதோ, எனக் கொடுக்க முடியும் என லெனின் வரையறுத்துக் கூறினர்.

× × ×

புதன்கிழமை பூத்தது. நவம்பர் 7 வந்தது. அதிகாரங்களனைத்தும் சோவியத் கையில்—சமாதானம், உணவு, நிலம், என்ற பேரொலி எழுந்தது போல்ஷ்விக்கர்களிடம், அதை எதிர்த்து மற்றக் கட்சிகளனைத்தும் ஐக்கிய முன்னணி அமைத்தன.

ஸ்டேட் பாங்கிற்கு (சர்க்கார் பாங்கிக்கு) முன்னல் காவல்காரர்கள். பீட்ரோகிராட் அரண்மனையில் (விண்டர் பாலஸ்) பயம் நிறைந்த அமைதி. பகல்முழுவதும் தலைநகரில் குழப்பமான நிலை. ஏனைய அரசியல் கட்சிகளுக்கு நிலைமை புரியவில்லை. ஆனல் போல்ஷ்விக் கட்சி செயலில் இறங்கி விட்டது. பீட்ரோகிராட் தொழிலாளி-போர்வீரர் சோவியத் கூடி 'அமைதி, உணவு, நிலம்,' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இரவு 10-40-மணிக்கு ருஷிய சோவியத் சபை கூடியது, அதற்குப் பலதிறப்பட்ட கட்சியினரும் வந்

திருந்தனர். தலைமைக் குழு தேர்ந்தெடுக்கும் பொழுதுதான் போல்ஷ்விக் கட்சியின் பலம் வெளிப் பட்டது 25 பேர்கொண்ட அந்தக் குழுவிலே லெனின் ட்ராட்ஸ்கி உள்பட 14 போல்ஷ்விக்கர்கள் காணப் பட்டனர். இதை மற்றக் கட்சிகள் பலமாக ஆட்சே பித்தன. அவர்களின் கூக்குரலுக்குப் பதிலாக திடீ ரென்று ஒரு சத்தம் வந்தது.

சத்தம்—பலமான சத்தம். ஆமாம்! குண்டுகளின் சத்தம். இங்கே திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்த னர். மக்கள் அந்தக் கட்டத்தை தாண்டி விட்டனர். மக்களின் பிரதிநிதிகள் தொண்டை கிழி யப் பேசினார்கள். ஆனால் வெளியே பீரங்கியின் வாய் முணுமுணுத்தது பீட்ரோகிராடின் அரண்மனை சிகப்புக் காவல்காரர்கள் கையிலே சிக்கிவிட்டது. அங்கு வெடித்த ஒலிதான் சோவியத் சபையின் காதுக்கு எட்டியது. அந்த வெறுப்பான ஒலியில் அடக்கப்பட்ட உணர்ச்சிகள் குமுறிக்கொண்டு வெளிப்பட்டன. புதிய முறுக்கு, புதிய காலம்—புதிய ருஷியா பிறக்கிறது.

சோவியத் சபை லெனினின் திட்டங்களை ஏற் றுக்கொள்கிறது 'போர் முனையில் நியாயமான முறையில் சமாதானம், தொழில்முறைகளின் பிடிப்பு, பாட்டாளிகளின் கையில் நிலங்கள், உழவாளிகளுக்

குப் பிரித்துக் கொடுக்கப்படும்' என்ற தீர்மானம் நிறைவேறுகிறது. சபை கலைந்தவுடன், அதற்கு வந்திருந்த பிரதிநிதிகள் தத்தம் நாடுகளுக்குச் செல்கின்றனர் சிகப்புச் செய்தியைத் தெரிவிக்க.

சபை கலையும்பொழுது வடக்குபோர் முனையிலிருக்கும் சேனையிடமிருந்து புதிய அரசாங்கத்திற்கு ஆதரவும் வாழ்த்தும் வருகிறது. எனினும் புதிய வாழ்வு நிலைக்குமா என்பது சந்தேகம். பீட்ரோகிராடில் போல்ஷ்விக்கர்கள் அரசாங்கத்தைக் கைப்பற்றித் திட்டங்கள் போட்டுவிட்டார்கள். அவைகள் நிறைவேற வேண்டுமே? பால்டிக் கடலிலிருந்து மஞ்சள் கடல் வரை பரந்த ருஷியா-உலகிலே ஆறில் ஒரு பகுதியான ருஷியா—எழுச்சியை ஏற்றுக் கொள்ளுமா? திட்டங்களை நிறைவேற்றுமா? இதே கேள்வியைத்தான் நவம்பர் 8-ந் தேதி (வியாழன்) மங்கியகாலை நடுக்கத்துடன் கேட்டது.

ருஷிய நாட்டின் குமுறல் அடக்க முடியாதது என்பது வெளிப்பட்டது. போல்ஷ்விக்கர்களின் மீது தாங்க முடியாத வசைவு. பழிவாங்கும்படி பத்திரிக்கைகளின் தூண்டுதல். 'கொடுங்கோன்மை, கொடுங்கோன்மை' என்று கொட்டை எழுத்துக்களில் சுவரொட்டிகள். இரயில்வேத் தொழிலாளர்கள் போல்ஷ்விக்கர்களுடன் சேர மறுக்கின்றனர். டெலிபோன் வசதிகள் குலைக்கப்பட்டன. தபாலிலாக்கா

ஒத்துழைக்கவில்லை. கெரன்ஸ்கியின் பலம் இன்னும் உடையவில்லை. அரசாங்க அதிகாரிகளும், வேலை பார்ப்பவர்களும் வெளியேறினர். போல்ஷ்விக்கர்கள் சலிக்கவில்லை. லெனின் எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாமல், எதிர்க்கட்சியினருடன் எத்தகைய சமாதானத்திற்கும் வர மறுத்தார். அவரின் தூண்டுதலால் சோவியத் சபை பல தீர்மானங்களை நிறைவேற்றியது. அவமதிப்பைத் தராதவகையில், நியாயமான சமாதானத்தை ஏற்றுக்கொள்ள முற்பட்டது. மன்னனின் மத குரு, தேவாலயங்கள், பெரும் பண்ணைகள்—இவர்களனைவருடைய நிலங்களை உழவாளர் சபைகளிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தது. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. லெனின் (தலைவர்) ட்ராட்ஸ்கி (வெளிநாட்டு விவகாரம்) ஸ்டாலின் (தேசிய இனங்களின் தலைமை) முதலியோர் அந்த அரசாங்கத்தில் இடம் பெற்றனர்.

போல்ஷ்விக்கர்களிடம் அதிகாரம் வந்தது. அது நீண்ட நாளைக்கு நிலைக்குமா? என்ற கேள்வி திகிலை உண்டாக்கியது.

நவம்பர் 9-ந்தேதி டான் பிரதேசத்திலிருந்து, காசக் வீரர்களின் தலைவனான கலிடின் என்பவன் போல்ஷ்விக் எதிர்ப்பு தலைநகருக்கு எட்டியது. கெரன்ஸ்கி (பழைய அரசாங்கத்துத் தலைவன்) படைகளைத் தயாராகும்படி உத்தரவிட்டான். தந்தி

யிலாக்காவும், இரல்வேயும் ஒத்துழைக்காததால் வெளியுலகிற்கும், ருஷியா முழுமைக்கும் செய்திகள் அனுப்பப் போல்ஷ்விக்கர்களால் முடியவில்லை. கடைசியாக விமானங்கள் மூலம் செய்தியனுப்பப் பட்டது. முதலாளிமார்களின் பத்திரிக்கைகள் பறி முதல் செய்யப்பட்டன.

பலமான எதிர்ப்புப்படை போல்ஷ்விக்கர்களுக் குத் தொல்லை கொடுத்தது. கெரன்ஸ்கியின் காசக் படை இன்னும் இரண்டொரு நாட்களுக்குள் தலை நகருக்குள் வந்துவிடும். மாஸ்கோவில் இன்னும் சரியான எழுச்சி வரவில்லை. கீவ் நகரில் ஆயுதசாலை யும், தந்தி நிலையமும் போல்ஷ்விக்கர்கள் கையில் விழுந்தது. என்ருலும் காசக்வீரர்கள் அவர்களை விரட்டிவிட்டார்கள். பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங் கத்தார்கள் பழைய அரசாங்கத்திற்கே ஆ.நரவு தந்தனர்

எனினும் புரட்சிப் புயலை அடக்க முடியாது. பால்டிக் கடற்படை போல்ஷ்விக்கர்களுக்கு ஆதரவு தந்தது. காசான் என்ற நகர் முற்றிலும் புரட்சியில் சேர்ந்து விட்டது போல் ஷ்க்கர்கள் தனியாக இல்லை. அவர்கள் பகுதியில் மக்கள்—தொழிலாளிகள், போர் வீரர்கள்—எதற்காக? புரட்சியைக் காப்பாற்ற வெகுண்டெழுந்த வேங்கைகள்!

× × ×

நவம்பர் 10ந் தேதி முதலாளிகளின் பத்திரிக்கைகள் அநேகமாக நின்றுவிட்டன. ரஷியா முழுமைக்கும் சிவப்பு காவற் படையினர் திரட்டப்படுகின்றனர். இங் நகரில் காசக் வீரர்கள் புரட்சி வீரர்களைச் சிறையிலிட்டனர். கலிடின்டான் வெளியில் சோவியத் சபைகளை கலைத்துங்கொண்டு வடக்கு நோக்கி வந்தான், இரயில்வே இன்னும் போல்ஷ்விக்கர்களுடன் சேரவில்லை. கரன்ஸ்கி பிட்ரோகிராடை நோக்கிப் பலமான பீரங்கிப் படையுடன் வந்துகொண்டிருந்தான்.

மறு பக்கத்தில் மாஸ்கோ திரண்டெழுந்தது. கிரம்ளின் மாளிகை புரட்சிக்காரர் வசமாகியது பலப்வல ஊர்களின் புரட்சியின் எதிரொலி கேட்டது. தலை நகரைக் காப்பாற்ற மக்கள் கூடினர். கையில் கிடைத்ததெல்லாம் ஆயுதம்—துப்பாக்கி, மண்வெட்டி, கோடாரி, அரிவாள்—தெருக்களில் எல்லாம் மக்கள், எதிர்பாளனுக்கு இறப்பு என்ற முழக்கம். பெண்கள், குழந்தை, முதியோர், தொழிளாலி பஞ்சை, அனைவரும் யுத்த வீரர்கள்.

நவம்பர் 11ந் தேதி புரட்சிக்கு எதிர்ப்புத் தலை தூக்கியது. அதை இப்பொழுது அலட்சியப் படுத்த முடியாது. பீட்ரோ கிராடில் எங்கும் வெடி சத்தம், தந்தி நிலையம் எதிர்ப்புப் படையால் பிடிக்கப்பட்டு விட்டது. புரட்சி வீரர்களின் இரத்தம்

கவலையின்றிச் சிந்தப்பட்டது. தோல்வி வருமோ என்ற பயம், ஆனால் விடக்கூடாது என்ற உறுதி, பிணங்களின்மேல் நடந்துதான் தந்தி நிலையமும் டெலிபோன் கட்டிடமும் பிடிக்கப்பட்டது.

மாஸ்கோவில் புரட்சிப் படை கிரம்ளின் மாளிகையிலிருந்து விரட்டப்பட்ட எதிர்ப்புப்படை ஏற்றுக் கொண்டது. புரட்சி வீரர்கள் பதினாயிரம் பேர்களே இருந்தனர், எதிர் பகுதியில் ஆறாயிரம் வீரர்கள், இருபத்தையாயிரம் காசக் வீரர்கள், இரண்டாயிரம் வெள்ளைக் காவற்காரர்கள்....எனினும் புரட்சி காப்பாற்றப்பட வேண்டும்.

போல்ஷ்விக்கர்கள் கூவுகின்றனர். "அதிகாரம் நம் கைக்கு வந்தது. அதை நழுவவிடக் கூடாது" ட்ராட்ஸ்கியோ, பெருத்த குரலில்—'நம்முடைய விவாதங்கள் தெருக்களில், இப்பொழுது பீரங்கி வாய்கள்தான் பேச வேண்டும்'

× × ×

நவம்பர் 12ந் தேதி கலக்கம் நிறைந்த நாள். கெரன்ஸ்கியைப் பற்றித் திகில் அதிகரித்தது. பாங்குகள் வேலை செய்யவில்லை. அரசாங்க பாங்கு லெனின் ஆணைக்கு அடங்க மறுத்தது. பழைய அரசாங்க சபையின் கூச்சல் குறையவில்லை. மாஸ்கோ

வில் எதிர்ப்புக் குறைந்துவிட்டது. தூரத்திலுள்ள சிறு சிறு கிராமங்களுக்கெல்லாம் இப்பொழுதுதான் புரட்சிச் செய்தி சேர்க்கப்பட்டது. ஒன்றன்பின் ஒன்ருக சோவியத் முறைக்குத் திரும்புகிறது. எனினும் ருஷியா முழுவதும் பீட்ரோகிராட் நிலையை எதிர்பார்த்துக் கொண்டு, மேற்செல்லாது தயங்கிக் கொண்டிருந்தன, தராசு முனை நேராக நின்றது. புரட்சி புகைந்து விடுமா? ஆமாம் என்றனர் எதிர்க் கட்சியினர். ஏனைய நாட்டுப் பிரதிநிதிகளும் தலையசைத்தனர்.

இரவு மூன்று மணி, திடீரென ஓர் செய்தி வந்தது. கெரன்ஸ்கியின் முயற்சி சிதறடிக்கப்பட்டது. புரட்சிப் படை முன்னேறுகிறது. முன்னேறு! முன்னேறு! புரட்சியே ஏறி நின்று எங்கும் பார்!

× × ×

நவம்பர் 13! வெற்றிநாள்! தலைநகரை நெருங்கிய காசக் படைவீரர் மக்கள் படைக்குமுன் சிதறியோடினர். இனிமேல் தயக்கம் வேண்டாம். எதிர்த்துப் போர்செய்—சமானத்திற்காக, உணவிற்காக உரிமைக்காக, நிலத்திற்காக.

உள்நாட்டிலிருந்து செய்திகள்:

கருங்கடலில் கடற்படையினர் சோவியத் பக்கம் சேர்ந்தனர், செபஸ்டாபூல், நோவாகிரேட் துறை முகக்களில் செங்கொடி.

மாஸ்கோவில் சண்டை! சரணடைய மறுத்தால் கிரம்ளின் மாளிகைமீது பீரங்கிப் பிரயோகம் 'பழங் கட்டிட மாயிற்றே! கலையை அழிக்காதே' என்ற கூக் குரல், பாதகமில்லை என்று பீரங்கி சொன்னது.

முழு ருஷியாவும் கொந்தளிக்கும் கடல், புரட்சிச் செந்தீ, பட்டி தொட்டிகளி லெல்லாம் கொழுந்துவிட் டெரிகிறது. வாழ்த்துக்கள், நன்றிகள், உறுதிகள், வெற்றிச் செய்திகள், லெலின் மாளிகையில் வந்து விழுகின்றன.

ருமேனியா முனையைத்தவிர மற்ற எல்லாப் போர்க்களங்களும் சோவியத்திற்கு பலமான ஆதரவு தந்தன.

எதிர்க் கட்சிகள் திகைப்படைகின்றன. சமா தானத்திற்கு வர கெரன்ஸ்கி தயாராக இருக்கின் ருர்.

நின்றுபேச நேரமில்லை, வீர லெனின் புன்னகை தந்து செல்கிருர்.

எள்ளி நகையாடிய பிறநாட்டு பத்திரிக்கைக் காரர்கள் 'அறிக்கை எங்கே?' என்று ட்ராட்ஸ்கியைக்

கேட்கின்றனர். 'அறிக்கை? அதோ! வெடிக்கும் பீரங்கியின் வாய் பலமாகச் சொல்லவில்லையா?' என்கிறார் ட்ராட்ஸ்கி.

உலகம் உணர்ந்தது புரட்சியென்று, இதுவரை கவிஞரின் கனவிலே வாழ்ந்தாய். ஏட்டிலே தவழ்ந்தாய், இளைஞர்களின் இதயங்களிலே இருந்தாய், பேச்சின் ஆர்வத்திலே, உணர்ச்சி வேகத்திலே, காணப்பட்டாய். ருஷியாவில் வந்தாய், பிரஞ்சில் வந்ததைப்போல, ஆனல் வெற்றி பெற்ருய், விழவில்லை.

× × ×

தொழிலாளிகளின் லெனின் கிராட் நவம்பர் 14–ந் தேதி கண் விழித்தது, வெற்றி மணம் வீசியது. வீதிகளில் வீரர்கள் ஆர்ப்பாட்டம்

சரி மற்ற நகரங்கள், காசான் வெற்றி.

ரோலே கிராட், எதிரிகள் ஓடினர். கேள்விப் படாத சிற்றூர்கள், எதிர்ப்பார்க்காத பேரூர்கள் எங்கிருந்தும் வெற்றி, வெற்றி!

மாஸ்கோ ருஷியாவின் உண்மையான தலை நகர். இருதயத் துடிப்பு. முதலாளிகளின் வசந்த மாளிகை கிரம்ளின் விழுந்தது. பாஸ்டில் விழுந்தது

போல. வெள்ளைப்படை விரட்டப்பட்டது. போரிலே வீழ்ந்த செம்படையினர் கிரம்ளின் மாளிகையில் ஜார் அரசர்களின் கல்லறைகளுக்குப் பக்கத்தில் புதைக்கப்பட்டனர். குருமார்களைக் காணேமே? குருமார்களா? எதற்கு?

ருஷிய மக்கள் பரவுலகத்தை மறந்துவிட்டனர். அங்கே தங்களுக்கு வசதிகள் செய்துதர எந்த குருமார்களையும் அவர்கள் அழைக்கவில்லை. ஏன்? மண்ணிலே விண்ணைக் காண்பிக்கச் செயலிலே இறங்கிவிட்டனர். கல்லறைகளில் இறந்த செம்படையினர் சவப் பெட்டிகள் இறங்கிய பொழுது புதிய ருஷியாவில் அடிப்படை தோண்டப்பட்டுவிட்டது.

× × ×

நவம்பர் 15-ந் தேதியில் பழைய அரசாங்கம் இருந்த இடமே தெரியவில்லை. குருமார்கள் வழிபாடு செய்வதை விட்டுவிட்டனர். லெலின் கூறியபடி ‘அதிகாரத்தை ஆளும் காலம்’ ஆரம்பமாகியது. அரசாங்கம் ஒழிந்தபோதிலும் எதிர் கட்சியினர் கையில் நாட்டின் பொருளாதார நிலை இருந்தது. அரசாங்க உத்தியோகஸ்தர்களின் வேலைநிறுத்தம், பாங்குகளின் கதவடைப்பு, வர்த்தகக் கடைகளின் ஒத்துழையாமை, புரட்சி அரசாங்கத்தை அல்லற்

படுத்தின. வெளிநாட்டு அதிகாரி ட்ராட்ஸ்கிக்கு பழைய ஒப்பந்தங்கள் கிடைக்கவில்லை. அவருடன் ஒத்துழைக்க மறுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த அனைவரும் வெளியேறினர். கொல்லண்டாய் உள் நாட்டு நலனுக்கு அதிகாரி, பொது அதிகாரிகளில் பலரைக் கைதுசெய்து அவர்களிடமிருந்து சாவிகள் பெற்றபின்புதான் காரியங்களை நடத்த முடிந்தது. பலத்த எதிர்ப்புகளுக்கிடையேதான் அரசாங்கம் காரியங்களைச் செய்யவேண்டி நேரிட்டது. ஆனால் அடுத்தநாள் நிலைமை முன்னேற்றமடைந்தது. கெரன்ஸ்கியின் ஓட்டம், சோவியத்து ஆட்சிக்கு ருஷியா முழுவதிலும் ஏற்பட்ட அபரிதமான வெற்றியும் நிலைமையை மாற்றியது. நிலையான சோவியத் ஆட்சி உறுதிப்பட்டது. ஆனால் இன்னும் உருக்கொள்ளவில்லை. நாட்டிலே தேர்தல் நடைபெற்றபின், அவர்கள் பெரும் பகுதியினராக வந்த பொழுதுதான் ஆட்சி நிலைபெற்றது.

அயல் நாடுகள் முதலில் அலட்சியம் செய்தன. பின் அறிக்கைகள் விட்டன. முடிவில் வெள்ளையாட்சிக்குப் பலமாகச் சேனைகள் அனுப்பின. கீழக்கோடியில் ஜப்பானின் தடபுடல். கருங்கடலில் பிரஞ்சுப்படை. தென்மேற்குப் பகுதியில் ருமேனியப் போர்க்களம். மேற்குப் பகுதியில் ஜெர்மனியின் படைகள் ஆர்ச் எஞ்சலில் ஆங்கில அமெரிக்

கப் படைகளின் ஆரவாரம். உள்நாட்டிலே டெனிகின், ராங்கல் போன்ற கலகப் படைத் தலைவர்கள், சீர்படாத நாடு, செம்மை அடையாத அரசாங்கம், பக்குவப்படாத தொழிலாளிகள், பாசறைகாணாத போர் வீரர்கள்.

அலைகள் மலையென எழுந்து மோதுகின்றன எனினும் கடற்பாறை கருத்தழிவதில்லை அந்தக் கடற்பாறையின்மீது இரண்டு உருவங்கள்— லெனின், ஸ்டாலின்.

கடலொலியைப் பிளந்து கொண்டு உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்! புரட்சி வாழ்க! என்ற பேரொலி கிளம்புகிறது.

—→×←—

மகளிர்-மாட்சி

'ஊருக்குப் போய்வந்த அலுப்பு போலிருக்கிறது'

'இரயில், பஸ் எல்லாத் தொந்தரவும், பையனுக்கு........'

'பெண் பார்க்கத்தானே.'

'ஆமாம், பெண் பார்க்கத்தான்'

'மதுரைப் பக்கமென்றால் கொஞ்சம் தொலைவு தான்.'

'ஆமாம். உமக்கெப்படி இதெல்லாம் தெரியும்.'

'ஊர் தொலைவு என்றால்கூட, வசதியான கிராமம், மிகச் சிறிய ஊர்.'

'குக்கிராமம் போலிருக்கிறது.'

'சிறு கிராமந்தான்...........இருந்தாலும் பரவாயில்லை. பஸ் பாதையிலேயே இருக்கிறது.'

"எல்லாம் பார்த்தால் முடியுமா? பெண் எப்படி?

'பெண் நிறம் சிகப்புதான். அதிகப்படியில்லை. குடித்தனம் பாங்குள்ளதாகத் தோன்றுகிறது...."

'நம் குடும்பத்துக்கு அப்படித்தான் இருக்க வேண்டும் சிங்காரித்துக்கொண்டு பேப்பர் படித்து விட்டால் போதுமா? பெண் பெயரென்னவாம்?'

'பெண் பெயரா? பெயர்தான்....தெரியவில்லை. அதற்கென்ன அவசரம் இப்பொழுது, கல்யாணப் பத்திரிகை அடிக்கும் பொழுது கேட்டால் போகிறது. மற்ற காரியங்களைப் பார்க்கவேண்டும்.'

மணமகனின் தந்தைக்கும் அவரின் நண்பருக்கும் நடக்கும் உரையாடல். இதுபோன்ற உரையாடல்கள் பல கேட்டிருக்கலாம். பெண் திருமணம் பருவமெய்தியவர். திருமணமும் குறிக்கப்பட்டுவிட்டது. அதற்கான காரியங்கள் நடைபெறுகின்றது. ஆனால் பெண்ணின் பெயர் தெரியவில்லை. வாழ்க்கையில் இடம்பெற வேண்டிய உயிரோவியமாக பெண்ணை எவரும் கருதவில்லை. பெண்ணுக்கே தான் யாரென்று அறிய முடியாதபடி கண்மூடித்தனத்தில் வாழும் நாடு நம்முடையது.

ஜார் ருஷியாவில் பெண் அடிமையாக வாழ்ந்தாள். சட்டப்படி பெண்ணுக்கு உரிமை எதுவும் கிடையாது, தனிச் சொத்து கிடையாது. கணவனின் அனுமதியின்றி வேலை செய்யக்கூடாது. மண விஷயத்தில் மண்டியிட்ட நிலைதான், ஐரோப்பிய ருஷியாவில் சொல்லவேண்டியதில்லை. அரசியல் சட்டங்கள், பொருளாதாரப் பிடிப்பு இவைகளுடன் மதக் கோட்பாடுகளும், மூட நம்பிக்கைகளும் பெண்ணை இழி நிலையில் வைத்திருந்தன. உஸ்பெக்,

டாட்ஜிக் பகுதிகளில் இளம் வயதில் விவாகம் வழக்கமாயிருந்தது. யாகூட் ஜாதியினர் சந்தையில் 8, 9 வயதுப் பெண்களை ஏலம் போடுவார்கள்! தவணை முறை மூலம் பெண்களை விற்கவும் வாங்கவும் கஷாக்காரர்களிடம் பழக்கமிருந்தது. மணவினை வாணிபத் துறையாக விளங்கியது. அதிக விலை கொடுத்து வாங்குபவனின் சொத்தாகி விடுவாள். மத்திய ஆசியா, காகஸஸ், கிரிமியா இடங்களில், பத்து வயது முதல் பெண்கள் குதிரை மயிர் திரைக்குள் மறைக்கப்பட்டனர். ஆண்களுடன் சமானமாக உட்கார்ந்து உணவருந்த முடியாது, ஆண்களின் எச்சிலுணவை பெண்கள் உண்ணவேண்டும். வீட்டு வேலைகளைச் செய்து, தரையில் உறங்கவேண்டும். புரட்சி, அடிமைச் சங்கிலிகளை உடைத்தெரிந்து; பெண்ணடிமை உட்பட சோவியத் அமைப்பின் 22 வது சட்டப்படி சமூக, பொருளாதார, அரசியல், கலை, அரசாங்க துறைகளனைத்திலும் பெண்கள் ஒத்த உரிமையுடன் உலவ முடியும்.

பெண்களுக்கு சம உரிமைகள் வந்ததும், பெண்ணுலகு தழைத்தது. பெண்களுக்கும் ஓட் உரிமைகள் உண்டு. உயர்தர அரசாங்க சபைக்கு 189 பிரதிநிதிகளும், அதனல் நியமிக்கப் படுவதில் 12 மக்கள் அதிகாரிகளாகவும் பெண்கள் வரமுடிந்தது. உயர்தரக் கல்வி பெறுபவர்கள் 100-க்கு 43-க்கு மேல் பெண்களே. பெண்களால் செய்யமுடியாத அளவுக்குக், கடுமையான வேலைகளைத் தவிர வேறெந்த வேலைக்கும் பெண்களுக்குத் தடை

கிடையாது. இதுவரை ஆண்களால்தான் முடியும் என்று கருதப்பட்ட பல வேலைகளில் சோவியத் பெண்கள் அமைத்துள்ளனர், உதாரணமாக இயந்திர விற்பன்னர்களாகவும், என்ஜினியர்களாக வும் 1 லட்சத்துக்கு குறைவில்லாமல் ருஷியப் பெண் கள் இருக்கின்றனர். இது உலகத்திலேயே கனவு காணமுடியாத அளவுக்கு மிகுதியானது. ரெயில் தொழிற்சாலைகளிலும், ரெயில் ஓட்டுதல் போன்ற தொழில்களில் ஐம்பதினாயிரம் பெண்கள் வேலை செய்கின்றனர். ரயில்வே இன்ஜினியர்களாக பதினாயிரம் பேர்கள் மங்கையர், பெரும் சந்திப்பு ஸ்டேஷன் மாஸ்டர்களாக நானூறு பேர்கள். நிரு வாக அதிகாரிகள், ஆலைமேற் பார்வையாளர், பண்ணை பாதுகாப்பாளர், டாக்டர்கள், விஞ்ஞானி கள், விமானிகள், அனைத்திலும் மகளிர் கூட்டம் நிறைந்துளது.

பொதுத் துறைகளில் பெண்கள் ஈடுபட்டதால் அவர்களுடைய வீட்டு வாழ்க்கை மங்கி விடவில்லை. பெண்கள் ஒத்த உரிமை அடைந்த பின்புதான் வாழ்வு ஒளிபெற்றிருக்கிறது. கூட்டு சமையல் முறை, பொது சலவையிடங்களும் பெண்களின் ஓய்வு நேரத்தை அதிகப் படுத்தியுள்ளன. அடுப் படியில் புகையுடன் போராடி, கசங்கிய கண்களுடன் ஓய்வின்றி பெண் உலழ வேண்டியதில்லை. வேலை நேரம் போக மீதிப் பொழுதை உல்லாசமாகக் கழிக் கலாம்.

சோவியத் அரசாங்கம் பெண்களுக்கு வசதிகள் அமைப்பதில் கவனமாயிருக்கிறது. பல நூற்றுண்டுகளாகத் தடைப்பட்டிருந்த பெண்கள் நிலை சோவியத் ஆட்சியில் முன்னேறுகிறது. உதாரணமாகப் பெண்கள் குழந்தைகள் பராமரிப்புக் கழகங்கள் 4,384 தற்பொழுது ருஷியாவில் இருக்கின்றன. புரட்சிக்குமுன் 9 தான் இருந்தன.

மனமொத்த மணத்திற்கு சோவியத் சட்டம் ஆதரவு தருகிறது. தனியுடமை ஒழிக்கப்பட்ட நிலையில் பெண்ணைப் பணத்துக்கு விற்கும் கொடுமை கிடையாது. விவாக ரத்து உரிமை இருபாலருக்கும் உண்டு. ஆனல் மற்ற ஐரோப்பிய நாடுகளை விமிகக் குறைந்த அளவில்தான் சோவியத் நாட்டில் விவாக ரத்துக்கள் நடந்தன. (விவாகமான பெண்கள் கணவனின் பெயரை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.) விபசாரம் என்ற சொல் அழுக்கேறிய அகராதிச் சொல். ஆணிவேரான தனியுடமை அடியோடு அழிக்கப்பட்டபின் விஷக்கனி எப்படி உண்டாகும்?

“சமூகத்தின் பாதிப் பேர்கள் அடுப்படியில் அவியும்பொழுது, அரசியல் குடியரசு அமைப்புகள் அர்த்தமற்ற பேச்சு” என்று லெனின் கூறினர். சமுதாய அடிப்படையை விஞ்ஞான முறையில் அறிவுரை. அந்த ஆழ்ந்த கருத்தை அர்த்தமுடையதாக்கிக் காட்டினர்கள் சோவியத் மகளிர்.